# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, பதுளை நலன்புரிக் கழக (கூட்டிணைத்தற்) சட்டம்

---

*[1984, ஜூன் மாதம் 21 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*
*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1984, ஜூன் மாதம் 22 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 60* *தபாற் செலவு : சதம் 60*

## 1984 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, பதுளை நலன்புரிக் கழக (கூட்டிணைத்தற்) சட்டம்

[1984, ஜூன் மாதம் 21 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 69/81 / 1492

### பதுளை நலன்புரிக் கழகத்தினைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்.

"பதுளை நலன்புரிக் கழகம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட கழகத்தோடு சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களையும் நிறைவேற்றுவதற்கும் பயனுறக் கொண்டு நடாத்துவதற்கும் என பதுளையில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

சொல்லப்பட்ட கழகம் எக் குறிக்கோள்களுக்கும் கருமங்களுக்குமாகத் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ் விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1984 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, பதுளை நலன்புரிக் கழக (கூட்டிணைத்தற்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கிய தேதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப் பின்னர் "கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பதுளை நலன்புரிக் கழகத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ள ஆட்களும், இத்தால் அமைக்கப்படும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கூட்டுத்தாபனத்திற்கு இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களான அத்தகை உறுப்பினர்களும் "பதுளை நலன்புரிக் கழகம்" என்ற பெயரின் கீழும் மகுடத்தின் கீழும் இடையறுவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப் பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம். அத்துடன், பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும், விரும்பியவாறு அதை மாற்றுவதற்குமான முழுத் தத்துவமும் அதிகாரமும் பெற்றதாயிருத்தலும் வேண்டும். பதுளை நலன்புரிக் கழகத்தைக் கூட்டிணைத்தல்.

3. கூட்டுத்தபானம் அமைக்கப்படும் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :— கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) பதுளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வதிபவர்களின் சமூக, பொருளாதார, ஆத்மீக நலன்களை மேம்படுத்தல் ;

(ஆ) இப்பிரிவில் சுகாதார, கல்வி, சமூக சேவைகளை செயற்படுத்தல், முன்னேற்றுதல் தொடர்பாக அரசுக்கும் வலிந்துதவு இயக்கங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்குதல் ;

(இ) இப்பிரிவில் விளையாட்டுத்துறையை மேம்படுத்தல் ;

(ஈ) இப்பிரிவில் வதியும் தொழிலற்ற குடியிருப்பாளர்களைச் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுதலை ஊக்குவித்தல் ;

எ 59784—2,650 (11/81)

(உ) இப்பிரிவில் வதிபவர்களிடையே நட்புறவு, பரஸ்பர ஒத்துழைப்பு, நற்பிரசை ஆகிய பண்புகளை வளர்த்தல்; அத்துடன்

(ஊ) மேற்குறிப்பிட்ட இலக்குகளையும் குறிக்கோள்களையும் எய்துவதற்குத் தேவையானவையும், விரும்பத்தக்கவையுமான வேறு எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

*நிறைவேற்றுக் குழு.*

4. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் கூட்டுத்தாபன விதிகளுக்கமையத் தெரிவுசெய்யப்படவேண்டிய அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களைக்கொண்டமைந்த நிறைவேற்றுக்குழுவொன்றினால் கூட்டுத்தாபன விதிகளுக்கிணங்க நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக்குழு, இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் பதவி வகிக்கின்ற கழகத்தின் நிறைவேற்றுக்குழுவாகவிருத்தல் வேண்டும்.

*கூட்டுத் தாபனத்தின் விதிகள்.*

5. (1) உறுப்பினரின் பொதுக் கூட்டமெதிலும் வாக்குப் பெரும்பான்மை கொண்டு, உறுப்பினரைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல், அவர்களை விலக்குதல் என்பவற்றுக்காகவும், நிறைவேற்றுக்குழுவினதும் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர், முகவர், சேவையாளர் என்போரினதும் கடமைகள் புரியப்படுவதற்காகவும், கூட்டுத்தாபன அலுவல்களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைக்காகவும், அத்துடன் வேறு வகையில் பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்கும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்கும் எனக் காலத்துக்குக் காலம் இச்சட்டத்துக்கு ஒவ்வாததாகாத விதிகளையாக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டபோது அதேவிதமான கூட்டத்தில் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அவை மாற்றப்படலாம், அவற்றிற்கு எதுவும் சேர்க்கப்படலாம், திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(2) கூட்டுத்தாபன விதியெதுவும் கூட்டுத்தாபனத்தின் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினரின் வாக்குக் கொண்டன்றி மாற்றப்படவோ, அல்லது அதற்கெதுவும் சேர்க்கப்படவோ, திருத்தப்படவோ அல்லது இல்லாதொழிக்கப்படவோ ஆகாது.

(3) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபன விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*கழகத்திடமிருந்து செல்பட்டியாகவுள்ளனவும் அதற்குச் செலுத்தப்படவுள்ளனவுமான கடன்கள்.*

6. இச்சட்டம் தொடங்கும் தேதியன்று கழகத்துக்கு இருந்து வந்த எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக சொல்லப்பட்ட கழகத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படவும் வேண்டும்.

7. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது நிறைவேற்றுக்குழுவின் இரு உறுப்பினர்களின் முன்னிலையில் அல்லாது எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படலாகாது என்பதுடன் அவர்கள் சமூகமாயிருந்ததற்குச் சான்றாக அச் சாதனத்தில் அவர்களது பெயர்களைக் கையொப்பமிடல் வேண்டும். அவ்விதம் கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுதலுக்குத் தனிவேறானதாதல் வேண்டும்.

கூட்டுத் தாபனத்தின் இலச்சினை எவ்விதம் பொறிக்கப் படல் வேண்டும் என்பது.

8. கூட்டுத்தாபனமானது கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க,—

(அ) ஏதேனும் கொள்வனவின், கொடையின், நன்கொடையின் அல்லது இறுதிவிருப்பாவணக் கையளிப்பின் பயனாக அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடியவாறான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகை கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாள சட்டப்படி இயலுமானதாதலும் வேண்டும்.

அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தைக் கூட்டுத்தாபனம் வைத்திருக்கலாம் என்பது.

9. கூட்டுத்தாபனம் அதன் குறிக்கோள்களை எய்துவதற்கென நிதிகளைத் திரட்டுவதும் அத்தகைய நோக்கத்துக்காக எவையேனும் ஈடுகளை, முறிகளை அல்லது கடப்பாடுகளை உருவாக்குவதும் நிறைவேற்றுவதும் அளிப்பதும் அல்லது வழங்குவதும் அதற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :

ஆயின், கூட்டுத்தாபனத்தினால் அவ்வாறு திரட்டப்படக்கூடிய தொகைகளின் கூட்டு மொத்தம் நிறைவேற்றுக்குழுவினால் தீர்மானிக்கப்படும் பணத்தொகையை விஞ்சுதலாகாது.

கடன் பெறுவதற்கான தத்துவம்.

10. கூட்டுத்தாபனத்தின் சார்பிலும் அதன் நன்மைக்கெனவும் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினரால், அலுவலரால், முகவரால் அல்லது சேவையாளரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட கொடுப்பனவுகளின் அளவுக்கு, கூட்டுத்தாபனம் அத்தகைய உறுப்பினருக்கு, அலுவலருக்கு, முகவருக்கு அல்லது சேவையாளருக்கு மீளளிப்புக் கொடுக்கலாம்.

மீளளிப்பு.

11. இச்சட்டத்தில் உள்ளது எதுவும், குடியரசினது உரிமைகளையேனும் ஏதேனும் அரசியல் குழுவினது அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும் அவர்களிலிருந்து, அவர்கள் மூலம் அல்லது அவர்களின் கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த ஏனையோரினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

குடியரசினதும் மறு பேரினதும் உரிமைகளைப் பேணல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.